ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருவெழுகூற்றிருக்கை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவெழுகூற்றிருக்கை ॥

## அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த தனியன்கள்

வாழி பரகாலன் வாழி கலிகன்றி⋆
வாழி குறையலூர் வாழ்வேந்தன்⋆ வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்⋆ மங்கையர் கோன்
தூயோன் சுடர்மான வேல்!

சீரார் திருவெழு கூற்றிருக்கை என்னும் செந் தமிழால்
ஆராவமுதன் குடந்தைப் பிரான்தன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ்வுலகுய்யவே
சேராமல் சொன்ன அருள் மாரி பாதம் துணை நமக்கே

‡ஒரு பேர் உந்தியிருமலர்த் தவிசில்⋆
ஒருமுறை அயனை ஈன்றனை⋆ ஒருமுறை
இரு சுடர் மீதினில் இயங்கா⋆ மும் மதிள்
இலங்கை இரு கால் வளைய⋆ ஒரு சிலை
ஒன்றிய ஈர் எயிற்றழல் வாய் வாளியின்
அட்டனை⋆ மூவடி நானிலம் வேண்டி⋆
முப்புரி நூலொடு மான் உரியிலங்கு
மார்வினின்⋆ இரு பிறப்பொரு மாண் ஆகி⋆
ஒருமுறை ஈர் அடி மூவுலகளந்தனை⋆
நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி⋆ நால் வாய் மும் மதத்திரு செவி
ஒரு தனி வேழத்தரந்தையை⋆ ஒரு நாள்
இரு நீர் மடுவுள் தீர்த்தனை⋆ முத்தீ
நான் மறை ஐ வகை வேள்வி⋆ அறு தொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை⋆ ஐம் புலன்
அகத்தினுள் செறுத்து⋆ நான்குடன் அடக்கி
முக் குணத்திரண்டவை அகற்றி⋆ ஒன்றினில்
ஒன்றி நின்று⋆ ஆங்கிரு பிறப்பறுப்போர்

www.prapatti.com

அறியும் தன்மையை⋆ முக் கண் நால் தோள்
ஐ வாய் அரவோடு⋆ ஆறு பொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை⋆
ஏழ் உலகெயிற்றினில் கொண்டனை⋆ கூறிய
அறு சுவைப் பயனும் ஆயினை⋆ சுடர் விடும்
ஐம் படை அங்கையுள் அமர்ந்தனை⋆ சுந்தர
நால் தோள் முந்நீர் வண்ண⋆ நின் ஈர் அடி
ஒன்றிய மனத்தால்⋆ ஒரு மதி முகத்து
மங்கையர் இருவரும் மலர் அன⋆ அங்கையின்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை⋆
நெறி முறை நால் வகை வருணமும் ஆயினை⋆
மேதகும் ஐம் பெரும் பூதமும் நீயே⋆
அறுபத முரலும் கூந்தல் காரணம்⋆
ஏழ் விடை அடங்கச் செற்றனை⋆ அறு வகைச்
சமயமும் அறிவரு நிலையினை⋆ ஐம்பால்
ஓதியை ஆகத்திருத்தினை⋆ அறம் முதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய்⋆
இரு வகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை⋆ குன்றா மது மலர்ச் சோலை
வண் கொடிப் படப்பை⋆ வரு புனல் பொன்னி
மா மணி அலைக்கும்⋆ செந்நெல் ஒண் கழனித்
திகழ் வனம் உடுத்த⋆ கற்போர் புரிசைக்
கனக மாளிகை⋆ நிமிர் கொடி விசும்பில்
இளம் பிறை துவக்கும்⋆ செல்வம் மல்கு தென்
திருக்குடந்தை⋆ அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க⋆ ஆடரவமளியில் அறிதுயில்
அமர்ந்த பரம⋆ நின் அடியிணை பணிவன்
வரும் இடர் அகல மாற்றோ வினையே

இது கம்பர் பாடிய பாடல் என்பர்

இடங்கொண்ட நெஞ்சத்திணங்கிக் கிடப்பன்⋆ என்றும் பொன்னித்-
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண் பூங்குடந்தை⋆



www.prapatti.com

விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ்வாய்⋆
படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப் பாதங்களே

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com